FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2021 மே

தொகுதி 05



சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கில் 2000 ஆம் ஆண்டு பிரதிவாதிகளாக குற்றம் சாட்டப்பட்ட 6 பேரை விடுதலை செய்தமை.



தனது முகப்புத்தகத்தில் வன அழிப்பு தொடர்பில் இடப்பட்ட பதிவு மற்றும் அவரால் பகிரப்பட்ட மற்றவர்களின் முகப்புத்தகங்களில் காணப்பட்ட பதிவு என்ற இரு காரணங்களை மேற்கோள்காட்டி நிர்வாக சேவையின் கடமைபுரியும் சமில ஜயசிங்க உத்தியோகத்தர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை.



காவல்துறை அதிகாரிகள் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சில நபர்கள் உதயன் பத்திரிகையில் கடமையாற்றும் ஊடகவியலாளர் ராமச்சந்திரன் சனத் என்பவரின் தகவல்களை சேகரித்தல் நிகழ்வு

**ஊடக சுதந்திரம் குறித்து மே மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள்,சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் ,நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடக சுதந்திரத்தை தாக்கத்திற்கு உள்ளாக்கும் கொள்கை ரீதியான மாற்றங்கள், ஊடகவியலாளர்களின் சுதந்திரம்,உரிமைகள் மற்றும் பொதுமக்களின் கருத்து சுதந்திரம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சமூக பொறுப்புடன் செயற்படும் வலைப்பதிவர்கள் (bloggers), பிரஜைகள் ஊடகவியலாளர்கள், சமூக ஊடக பயனர்களின் கருத்து சுதந்திரம், சமூக நலன்கருதி தொண்டுப்பணியில் ஈடுபடும் மனித உரிமை ஆர்வலர்கள், தகவல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் அதிகாரிகள் (Whistle-Blower) உட்பட சிவில் சமூகத்தினருக்கு காணப்படும் கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை, பயண மற்றும் கருத்து தெரிவிப்பதற்காக காணப்படும் பரம(மறுக்கப்பட முடியாத) உரிமை அதில் மிக முக்கியமானதாக காணப்படும் தகவல் அறியும் உரிமை போன்றவைகள் இந்த அறிக்கையில் பிரத்தியேக கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.**

இம்மாதத்தின் அறிக்கைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள 09 நிகழ்வுகளில் பல நிகழ்வுகள் பிரஜைகள் சமூகத்திற்கு நேரடி தொடர்புடையதாக காணப்படுகின்றது. ஊடக சுதந்திரம் மற்றும் உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 09 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மே 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுதந்திர ஊடக இயக்கம் இரு சம்பவங்கள் குறித்து ஊடக அறிக்கை வெளியிட்டதுடன் காஸா மீதான இஸ்ரேல் நடத்திய ராக்கெட் தாக்குதலில் காஸாவில் உள்ள சர்வதேச ஊடக அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பாக சகோதர ஊடக அமைப்புகளுடன் இணைந்து ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு என்ற வகையில் ஒரு கூட்டு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

## மே மாதத்தில் இடம்பெற்ற புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

1. உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு மே 3, 1991 இல் யுனெஸ்கோ வெளியிட்ட விண்ட்ஹோக் பிரகடனத்தை “விண்ட்ஹோக் 30+ பிரகடனம் “ என மேம்படுத்தி பெயரிடப்பட்டமை.
2. சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கில் 2000 ஆம் ஆண்டு பிரதிவாதிகளாக குற்றம் சாட்டப்பட்ட 6 பேரை விடுதலை செய்தமை.

3. தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாஃப் ஜஸீம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு ஓராண்டு நிறைவை முன்னிட்டு இரு வெவ்வேறு இணையவழி கலந்துரையாடல்கள் நடைப்பெற்றதுடன் அவரை விடுவிக்குமாறு பல சர்வதேச அமைப்புக்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியமை.

4. ஊடகங்களில் கருத்து தெரிவித்தல் தொடர்பில் தாபன விதிக்கோவை சட்டத்தின் மூலம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி சுகாதார அமைச்சின் செயலாளரால் சுகாதாரத் துறையின் கீழ் காணப்படும் சகல நிறுவனத் தலைவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பியமை.

5. கொவிட் 19 தொற்று தொடர்பில் செய்திப் பத்திரிகைக்கு கட்டுரை எழுதியமை மற்றும் யூடியூப் அலைவரிசையொன்றிற்கு நேர்முகப் பேட்டி அளித்த காரணத்தால் சுகாதார துறையில் மக்கள் மத்தியில் பிரபல தகவல் தொடர்பாளரான மருத்துவர் சமல் சஞ்சீவவிற்கு எதிராக சுகாதார அமைச்சால் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டமை.

6. தனது முகப்புத்தகத்தில் வன அழிப்பு தொடர்பில் இடப்பட்ட பதிவு மற்றும் அவரால் பகிரப்பட்ட மற்றவர்களின் முகப்புத்தகங்களில் காணப்பட்ட பதிவு என்ற இரு காரணங்களை மேற்கோள்காட்டி நிர்வாக சேவையின் கடமைப்புரியும் சமில ஜயசிங்க உத்தியோகத்தர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை.

7. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு எதிராக தடை உத்தரவொன்றை ஊடகவியலாளரான புன்யமூர்த்தி சசிதரனுக்கு கையளிப்பதற்காக காவல்துறையினரினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி.

8. காவல்துறைஅதிகாரிகள்என்றுதம்மைஅடையாளப்படுத்திகொண்ட சில நபர்கள் உதயன் பத்திரிகையில் கடமையாற்றும் ஊடகவியலாளர் ராமச்சந்திரன் சனத் என்பவரின் தகவல்களை சேகரித்தல் நிகழ்வு.

9. முல்லைத்தீவை தளமாக கொண்டு கடமைப்புரியும் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனின் தொழில் பணிகளை மேற்கொள்வதற்கு இராணுவ அதிகாரிகளினால் அனுமதி மறுக்கப்பட்டமை.

**அட்டவணை எண்: 01**

**அறிக்கையிடப்பட்ட மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை – 2021 மே மாதம்**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூருகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 05 |
| 02 | சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 03 |
| 03 | ஊடகங்கள் தொடர்பான புதிய மற்றும் முக்கிய போக்குகள் | 01 |
| | **மொத்தம்** | **09** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஓர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. இந்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தும் நான்கு நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மே மாதத்தில் கண்காணிக்கபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.மேலும் ஊடகத்துறையில் தொழில் புரியும் நபர்கள் நேரடியாக எதிர்கொள்ளும் நிகழ்வுகள்,சம்பவங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் கருத்து தெரிவித்ததன் காரணமாக பொதுமக்கள் எதிர்கொள்ள நேரிட்ட சம்வங்கள்,நிகழ்வுகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2:**

**2021 மே மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 05**

| இலக்கம் | நிகழ்வு மற்றும் சம்பவம் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கருத்து சுதந்திரத்தை இழத்தல் | 02 |
| 02 | பயண மற்றும் தகவல் அணுகலுக்கான உரிமையை தடுத்தல். | 01 |
| 03 | உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 02 |
| | **மொத்தம்** | **05** |

## மார்ச் மாதத்திற்கான புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

1. **ஊடகங்களில் கருத்து தெரிவித்தல் தொடர்பில் தாபன விதிக்கோவை சட்டதின் மூலம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி சுகாதார அமைச்சின் செயலாளரால் சுகாதாரத் துறையின் கீழ் காணப்படும் சகல நிறுவனத் தலைவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பியமை.**

"வெகுசன ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தல்" என்று தலைபிட்டதும் 2020-05-10 ஆம் திகதியிடப்பட்டதுமான கடிதம் சுகாதாரத்துறை அமைச்சரின் செயலாளரினால் சுகாதார துறைச் சார்ந்த அனைத்து அரச நிறுவனங்களின் முதன்மை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சுகாதாரத்துறை அதிகாரிகள் "வெவ்வேறு குழுக்களாகவும் மற்றும் தனித்தனியாகவும் உண்மையற்ற சுகாதார தகவல் மற்றும் தரவுகளை அடிப்படையாக கொண்டும் சுகாதாரத்துறையின் கொள்கை ரீதியான கருத்துகளை விமர்சித்து ஊடகங்களில் கருத்து தெரிவிக்கும் போக்கு அதிகரித்துள்ளமை" என தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள செயலாளர் ,தாபன விதிக்கோவையின் பல சட்ட ஏற்பாடுகளை மேற்கோள் காட்டி குறித்த ஏற்பாடுகளை மீறும் அதிகாரிகளுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த எச்சரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க அதிகாரிகளால் கருத்துக்களை வெளியிடுதல் சம்பந்தமாக காணப்படும் சட்ட ஏற்பாடுகளான தாபன விதிக்கோவையின் II ஆம் இலக்க XLVII ஆம் அத்தியாயம் 6 மற்றும் 7 ஆம் பிரிவு மற்றும் அரச கொள்கை அல்லது நிர்வாக செயற்பாடுகள் சம்பந்தமாக கருத்து தெரிவித்தல் மற்றும் விமர்சித்தல் செயற்பாடுகள் தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் உள்ளடங்கிய தாபன விதிக்கோவை 1 ஆம் இலக்க XXXI அத்தியாயம் 3 ஆம் பகுதி மறுசீரமைக்கப்பட்ட,2019.02.27 திகதியிடப்பட போது நிர்வாக சுற்றறிக்கை இல 06/2019 போன்றவைகள் குறித்த கடிதத்தில் மேற்கோள்காட்டப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

இக் கடிதமானது அனைத்து சுகாதாரத்துறை ஊழியர்களின் கருத்து சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், தொழிற்சங்க உரிமைகள் போன்றவற்றில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதுடன், மறுபுறம் தகவல் பெறுவதற்கான சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்.

மேலும், குறித்த கடிதம் சட்டரீதியான சிக்கல்களை உண்டாக்கியுள்ளது. அடிப்படை உரிமையான கருத்துச் சுதந்திர உரிமை, தாபன விதிக்கோவை சட்ட ஏற்பாடுகளை காட்டிலும் உயர் நிலையில் காணப்படுவதை உயர் நீதிமன்ற தீர்பான 76/2012 ஆம் இலக்க அடிப்படை உரிமை வழக்கு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஆதாரம்: பீ.எஸ் மனோகரி பெல்கெடிய எதிரிவ மற்றும் மற்றவர்கள் - வழக்கு இலக்கம் 76/2012)

மேலும், 2016 ஆம் ஆண்டில், தகவல் அறியும் உரிமை அரசியலமைப்பில் ஒரு அடிப்படை உரிமையாக இணைக்கப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமைச் சட்டத்தின் விதிகள் முன் இருந்து காணப்படும் சட்ட ஏற்பாடுகளுக்கும் பொருந்தும். (ஆதாரம்: சம்பந்தப்பட்ட சட்டம் இந்தச் சட்டத்தின் வலை இணைப்பை பக்க தளவமைப்பில் உள்ளிடலாம்)

சுகாதார செயலாளரின் இந்த நடவடிக்கை தொற்றுநோயை மூடிமறைப்பதற்கும், கருத்து தெரிவிப்பதற்காக அதிகாரிகளுக்கு காணப்படும் உரிமை,பல்வேறு மூலாதாரங்களில் இருந்து தகவல்களைப் பெறுவதற்காக ஊடகங்களுக்கு காணப்படும் உரிமைகளை மீறும் செயற்பாடு என சுதந்திர ஊடக இயக்கம் கண்டன ஊடக அறிக்கையொன்றை வெளியீட்டு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மூலாதாரம்: குறித்த ஊடக அறிக்கை)

2. **கொவிட் 19 தொற்று தொடர்பில் செய்திப் பத்திரிகைக்கு கட்டுரை எழுதியமை மற்றும் யூடியூப் அலைவரிசையொன்றிற்கு நேர்முகப் பேட்டி அளித்த காரணத்தால் சுகாதார துறையில் மக்கள் மத்தியில் பிரபல தகவல் தொடர்பாளரான மருத்துவர் சமல் சஞ்ஜீவவிற்கு எதிராக சுகாதார அமைச்சால் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டமை.**

சுகாதார அமைச்சின் பெருந்தோட்ட மற்றும் நகர்ப்புற விவகாரங்களின் துணை இயக்குனரான மருத்துவர் சமல் சஞ்ஜீவ நீண்ட காலமாக ஊடகங்களுக்கு கட்டுரைகளை எழுதுவதும், சுகாதார பிரச்சினைகள் குறித்து இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஒரு சிறந்த தகவல் தொடர்பாளராக செயல்படுபவர் ஆவார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தல் தொடர்பாக மே மாதம் 31 ஆம் திகதி அடிப்படை விசாரணைக்கு அறிக்கையொன்றை பெற்றுகொள்வதற்காக, துணை இயக்குனரினால் (மக்கள் சுகாதார துறை சேவை (நிர்வாக)) அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இருந்த போதிலும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு என்னவென்பதை அறிவிக்கவில்லை. அது அப்படி இருக்க மருத்துவர் சன்ஜீவ குறித்த தினத்தில் தமக்கு விசாரணைக்கு பங்குபற்ற முடியாத சூழ்நிலை காணப்படுவதை தெரியப்படுத்திய பின்னர் மீண்டும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி வருகை தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஊடக அறிக்கையின்படி,நாடு முடக்கப்படா விடின் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ற தலைப்பில் மே மாதம் 16 ஆம் திகதி திவயின செய்திப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை மற்றும் அதை தொடர்ந்து யூடியூப் அலைவரிசையில் நடைப்பெற்ற நேர்முகப்பேட்டி நிகழ்வில் கலந்துகொண்டமை போன்ற நிகழ்வுகளே குறித்த விசாரணைகளுக்கு காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுகாதாரத்துறை செயலாளரினால் 2020-05-10 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட கடிதத்தை செயற்படுத்தும் விதமாக குறித்த நிகழ்வு அமைந்துள்ளமை அவதானிக்கத்தக்கதாகும். (மூலாதாரம் - திவயின செய்திப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை https://bit.ly/2TdVbIV யூடியூப் அலைவரிசையில் நிகழ்ந்த கலந்துரையாடல்)

பதிப்பு, கருத்து உரிமைகளை கட்டுப்படுத்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக "உழைக்கும் மக்கள் சக்தி" அமைப்பினால் 2021-05-22 ஆம் திகதி கண்டன அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. மேலும் குறித்த அறிக்கையில் ஒழுக்காற்று விசாரணை உட்பட வேறு விதமான அச்சுறுத்தல் செயற்பாடுகளுக்கும் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

3. **காவல்துறை அதிகாரிகள் என்று தம்மை அடையாளப்படுத்திகொண்ட சில நபர்கள் உதயன் பத்திரிகையில் கடமையாற்றும் ஊடகவியலாளர் ராமச்சந்திரன் சனத் என்பவரின் தகவல்களை சேகரித்தல் நிகழ்வு.**

காவல்துறை அதிகாரிகள் என தம்மை தாமே அடையாளப்படுத்திகொண்ட நபர்கள் மற்றும் குழுக்கள் பல சந்தர்ப்பங்களில் தான் தொடர்பில் தகவல் சேகரிப்பதாக

கூறி குடுபத்தினர் மற்றும் உறவினர்களை சந்தித்து விசாரித்துள்ளனர் என்பதாக ஊடகவியலளர் ராமச்சந்திரன் சனத் பொலிஸ்மா அதிபரிற்கு எழுத்து வடிவிலான முறையீடு ஒன்றை மேற்கொண்டுள்ளார். உதயன் செய்திப்பத்திரிகையில் ஊடகவியலாளர் ஆக கடமைபுரியும் அவர் “சுடர் ஒலி” பத்திரிகையின் முன்னாள் துணை ஆசிரியர் மற்றும் சமூக ஆர்வரலராகவும் செயலாற்றுகிறார்.

அந்தக் கடிதத்தின் படி,2021 மார்ச் மாதமளவில் கம்பளையில் உள்ள தனது தாயார் வீட்டுக்கு சென்றுள்ள சிலர் தங்களை கம்பளை காவல்துறை என அடையாளப்படுத்திக்கொண்டு “அவர் என்ன செய்கிறார்,எங்கு வேலை புரிகிறார்,எதற்காக கம்பளையை விட்டு பிறிதொரு பகுதிக்கு சென்றார்” என்பது உட்பட மேலும் பல தகவல்களை திரட்டியுள்ளனர். அதன்பின்னர் தலவாக்கலை பொலிஸ் பிரிவின் சி.ஐ.டியினர் என தங்களை அடையாளப்படுத்திய இருவர் தெற்கு மடக்கும்புரவில் உள்ள அவரின் மனைவியின் வீட்டிக்கு அவரை தேடி சென்று விசாரித்தனர். பிடித்தளராதே மற்றும் மலையாக உரிமைக்குரல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட “மலையக தியாகிகள் தினம்” பற்றி தகவல்களை பெற்றனர். அவர்களது அமைப்புக்கள் பற்றியும் விசாரித்தனர். பின்னர் மே மாதம் 25 ஆம் திகதி கம்பளையில் அமைந்துள்ள அவரின் சகோதரியின் வீட்டிற்கு சென்று காவல்துறை அதிகாரிகள் என அடையாளப்படுத்திகொண்ட நபர்கள் அவர் குறித்து மீண்டும் விசாரித்தமை கவனிக்கத்தக்கதாகும்.

இது தொடர்பில் மே மாதம் 27 ஆம் திகதி பொலிஸ் மா அதிபரிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிய சுதந்திர ஊடக இயக்கம் ஊடகவியலாளர் ராமச்சந்திரன் சனத் சம்பந்தமாக தகவல் சேகரிப்பது காவல்துறையினரா? ஆம் எனில் எந்த காரணத்திற்காக அவர் குறித்து தகவல் சேகரிக்கப்படுகின்றது என்பதனை உரிய முறையில் விசாரணை நடத்தி உண்மை தகவலை மக்களுக்கு தெரியப்படுத்துமாறு குறித்த கடிதத்தில் பொலிஸ் மா அதிபரை வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மூலாதாரம் -குறித்த கடிதம்)

இத்தகைய செயற்பாடுகள் ஊடகவியலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அதிர்ச்சிகரமான சம்பவங்களாகக் அடையாளம் காணமுடியும்

4. **முல்லைத்தீவை தளமாக கொண்டு கடமைப்புரியும் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனின் தொழில் பணிகளை மேற்கொள்வதற்கு இராணுவ அதிகாரிகளினால் அனுமதி மறுக்கப்பட்டமை.**

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த சண்முகம் தவசீலன் என்ற பத்திரிகையாளர் மே 22 திகதி அன்று முல்லைத்தீவு நகரத்திற்கு தமது பணித் தொடர்பில் சென்று கொண்டிருந்தபோது, அவரை வற்றாப்பளை மூன்றாம் கட்டைக்கு அருகிலுள்ள சோதனைச் சாவடியில் இராணுவ அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். சோதனைச் சாவடிக்கு அப்பால் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று உயர் அதிகாரிகளால் உத்தரவிடப்பட்டிருப்பதாக அவ்விடத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த நேரத்தில், ஊடகவியலாளர் இந்த சம்பவம் குறித்து முள்ளியவலை காவல்துறை பொறுப்பதிகாரிக்கு அறிவித்த போது அவருக்கு பயணிப்பதற்கான எந்த தடையும் இல்லை என்று குறித்த காவல்துறை அதிகாரி கூறியிருந்தார். இருப்பினும், காவல்துறையினர் அவ்வாறு கூறினாலும் தங்களால் பயணிப்பதற்கான அனுமதி கொடுக்க இயலாது என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காவல்துறை பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட சோதனைச் சாவடிக்கு பொறுப்பான உயர் இராணுவ அதிகாரிகளுக்கு அறிவித்ததன் பின்னர் குறிப்பிடத்தக்க தாமதத்திற்குப் பிறகு அவரின் தகவல்களை பதிவு செய்துகொண்டதன் பின்னர் அவரை வெளியேற அனுமதித்தனர்.

(ஆதாரம்: JDS https://bit.ly/3uOBKDr)

குறித்த சம்பவம் தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர், அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளரை தொடர்பு கொண்டு இது தொடர்பில் வினவியபோது ஊடகவியலாளர்களின் பணிகளை மேற்கொள்ளும் தருணத்தில் பயணத்தடை சட்டமானது ஊடகவியலாளர்களுக்கு செல்லுபடியாகாது என்பதாக குறிப்பிட்டுள்ளார். கொவிட் தொற்று காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை ஊடகவியலாளர்களின் பணிகளின் போது செல்லுபடியாகாது என்று அதிகாரிகள் குறிப்பிட்ட போதிலும் கடமையில் இருக்கும் அதிகாரிகள் போதிய அளவு தகவல்களை பெறாமையினால் அல்லது சொல்லப்பட்ட செயன்முறைகளுக்கு அப்பால் செயற்படுதல் காரணமாக ஊடகவியலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்

5. **முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு எதிராக தடை உத்தரவொன்றை ஊடகவியலாளரான புன்யமூர்த்தி சசிதரனுக்கு கையளிப்பதற்காக காவல்துறையினரினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி.**

இலங்கை இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையிலான கடைசி போரில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் மே மாதம் 18ஆம் திகதி ஆண்டுதோறும் நிகழும் “முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்” நிகழ்வை நடத்தக்கூடாது என்று நீதிமன்றத்தால் கட்டளையிட்ட தடை உத்தரவை மட்டக்களப்பு ஊடகவியலாளர் புண்யமூர்த்தி சசிகரனுக்கு வழங்குவதற்கு காவல்துறையினர் சென்றிருந்த போதிலும் குறித்த ஊடகவியலாளர் குறித்த தடை உத்தரவு பத்திரத்தை பெற்றுக்கொள்ள மறுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்

(ஆதாரம் - லீடர் வலைத்தளத்தில் காணப்படும் அறிக்கை https://bit.ly/2S0mDJw) மேலும் ,சசிகரன் அண்மைக்காலம் வரை சிரச நிறுவனத்தின் சக்தி அலைவரிசையில் நிருபராக பணியாற்றி வந்துள்ளார், தற்போது ஒரு சுயாதீன பத்திரிகையாளராக பணியாற்றி வருகிறார். குறித்த தடை உத்தரவில் தான் மீனவர் சங்கத்தின் தலைவராக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் இருப்பினும் தான் அவ்விதமான எந்த வித பதவிககளையும் வகிப்பதில்லை என்பதாகவும் சசிகரன் குறிப்பிட்டார். காவல்துறை மேலே குறிப்பிட்ட நினைவேந்தலை தடுப்பதற்காக இவ்வகையான தடை உத்தரவுகளை வெவ்வேறு 21 நபர்களுக்கு எதிராக பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் மேலும் குறித்த தடை உத்தரவை மட்டகளப்பில் வசிக்கும் இன்னொரு ஊடகவியலாளருக்கு எதிராகவும் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் ஊடகவியலாளர் சசிகரன் மேலும் விவரித்தார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் நடைப்பெற்ற எதிர்ப்பு போராட்டத்திற்கு எதிராக சஷிகரனுக்கும் இதேபோன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், மேலும் அவர் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதை எதிர்த்து மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் அளிப்பதாகவும் கூறினார்.

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பில் சட்டவிதிமுறை தலைப்பு அல்லது பகுதி கூறுக்குள் உள்ளடக்கப்படும் 3 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மே மாத அறிக்கையில் கண்காணிக்கபட்டு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நிகழ்வுகளின் ஒரு நிகழ்வானது கருத்து தெரிவிக்கும் உரிமைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் , இன்னொரு நிகழ்வானது ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களின் போது தண்டனை விதிவிலக்கல் என்ற உப தலைப்புகளில் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாவது நிகழ்வு கடந்த கால நிகழ்வுகளின் வளர்ச்சி போக்காகவும் காணப்படுகின்றது.**

**அட்டவணை 3:**

**மே மாதம் 2021: சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 03**

| இலக்கம் | நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 02 |
| 02 | ஊடகவியலாளர்கள்களுக்கு எதிரான குற்றங்களில் இருந்து தண்டனை விதிவிலக்கல் | 01 |
| | **மொத்தம்** | **03** |

1. சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கில் 2000 ஆம் ஆண்டு பிரதிவாதிகளாக குற்றம் சாட்டப்பட்ட 6 பேரை விடுதலை செய்தமை.

யாழ்பாண தீபகற்பத்தை தளமாக கொண்டு ஊடகவியல் பணியை மேற்கொண்ட ஊடகவியலாளரான மயில்வாகனம் நிமலராஜன் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி கொல்லப்பட்டார். அதை தொடர்ந்து அவரின் கொலைக்கு தொடர்புள்ளதாக குற்றம்சாட்டப்பட்ட பிரதிவாதிகளான 6 நபர்களை விடுதலை செய்வதற்கு 2021 மே மாதம் 5ஆம் திகதி யாழ்பாண நீதவான் உத்தரவிட்டார். குறித்த வழக்கை முடிவுக்கு கொண்டுவரக்கொறிய சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே குறித்த தீர்மானம் கிட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(மூலாதாரம் - டயிம்ஸ் வலைத்தளம் https://bit.ly/3bfRati) சட்டமா அதிபரின் எவ்வித ஆலோசனையும் வழங்கப்படாமையினால் இந்த வழக்கு 2004 ஆகஸ்ட் மாதம் முதல் நீண்டகாலம் வரை வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மயில்வாகனம் நிமலராஜன், பல சவால்களுக்கு மத்தியில் அறிக்கையிடுதல் தொடர்பில் இலங்கையின் ஒரு நட்சத்திரமாக செயலாற்றியவர். அவர் கொலைசெய்யப்பட்டதன் பின்னர் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் நடத்தும் விருது வழங்கும் விழாவில் அவருக்கு ‘2000 ஆம் ஆண்டிற்கான சவால்களுக்கு மத்தியில் அறிக்கையிடல்’ தொடர்பில் விசேட விருதை அவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டார். கொலைக்கு உள்ளாகும் காலப்பகுதியில் அவர் பிபிசி உலக சேவை மற்றும் தமிழோசை, ராவய, வீரகேசரி செய்திப்பத்திரிகை மற்றும் வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவைகள் போன்ற பல ஊடகங்களில் கடமையாற்றியதுடன் ‘ஹரய’ டெய்லொயிட் சிங்கள மொழி மூலமான பத்திரிகையின் யாழ்பாண அதிகாரப்பூர்வ செய்தி நிருபராக கடமையாற்றியவராவார்.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட நான்கு ஆண்டுகளுக்குள், 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர், அவர்கள் அனைவரும் ஈபிடிபி அமைப்பின் உறுப்பினர்கள் ஆவர். பின்னர் ஐந்து சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டனர், மீதமுள்ள 6 பேர் அவ்வப்போது பிணையில் விடுவிக்கப்பட்டனர். நிமலராஜனின் படுகொலைக்கு நீதி வழங்குமாறு சுதந்திர ஊடக இயக்கம், ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளுக்கான சர்வதேச அமைப்புகள் உள்ளிட்ட உள்ளூர் ஊடக அமைப்புகளும் கடந்த 20 ஆண்டுகளாகவும் பலமுறை அரசாங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன,இருந்த போதிலும் அவ்வாறு நீதியை பெற்றுகொடுக்க தவறிவிட்டமை கவலைக்குரியதாகும்.

சட்டமா அதிபரின் தீர்மானத்தை எதிர்த்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், நிமலராஜன் கொலை தொடர்பில் மீண்டும் விசாரணையை ஆரம்பித்து ஊடகவியலாளர் நிமலராஜனை கொலை செய்தவர்களுக்கு தண்டனை அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மூலாதாரம்: கலம்புபோஸ்ட் வலைத்தளம் https://bit.ly/3fq7AC5)

2. தனது முகப்புத்தகத்தில் வன அழிப்பு தொடர்பில் இடப்பட்ட பதிவு மற்றும் அவரால் பகிரப்பட்ட மற்றவர்களின் முகப்புத்தகங்களில் காணப்பட்ட பதிவு என்ற இரு காரணங்களை மேற்கோள்காட்டி நிர்வாக சேவையின் கடமைப்புரியும் சமில ஜயசிங்க உத்தியோகத்தர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை.

கொத்மலை உதவி நில தீர்வு ஆணையர் சமில இந்திக ஜெயசிங்க தனது முகநூல் கணக்கில் காடழிப்பு குறித்த தவறான தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் மே மாதம் 21 அன்று கைது செய்யப்பட்டார்.

“நாட்டில் காடழிப்பு நடைபெறுவதாகக் கூறி குறித்த அதிகாரி தனது முகப்புத்தகத்தில் பல தவறான செய்திகளை வெளியிட்டுள்ளார்” என குற்றவியல் திணைக்களத்தின் கணனி பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்ட மூலாதாரங்களில் இருந்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டார். (மூலாதாரம் - News Wire வலைத்தளம் https://bit.ly/3vbvLcF)

மே மாதம் 22 ஆம் திகதி,தண்டனைச் சட்டக்கோவை 120 பிரிவின் கீழ் ‘அரசுக்கு எதிராக பொதுமக்களை தூண்டுதல்’ என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபரை கொழும்பு ஏழாம் இலக்க மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தின் முன்னிலையில்

ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவரின் முகப்புத்தகத்தில் காணப்படும் காடழிப்பு தொடர்பான பழைய பதிவுகள் மற்றும் அவரால் பகிரப்பட்டுள்ள பதிவுகள் தொடர்பிலும் நீதிமன்றத்திற்கு விரிவான அறிக்கை சமர்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

சமில ஜயசிங்க காவல்துறை விசாரணையாளர்களை கத்தியால் தாக்குவதற்கு முற்பட்டதாகவும் விசாரணையாளர்களை அச்சுறுத்தியதாகவும் காவல்துறையினர் பொய்யான குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் முன்வைத்து அவரை தடுப்புக்காவலில் வைப்பதற்காக வேண்டுகோள் விடுத்தபோதிலும் குறித்த குற்றச்சாட்டுகளை ஏற்கமறுத்த சந்தேகநபர் ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டதாக வழக்கறிஞர் மஞ்ஜு ஸ்ரீ சந்திரசேன குறிப்பிட்டார். (மூலாதாரம்- அயிதிய வலைத்தளம் https://www.aithiya.lk/chamila-jayasinghe-released-on-bail/)

சமல் ஜயசிங்கவின் கைது சமூக ஊடகங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் , அவர் அரசியல் செல்வாக்கிற்கு அடிபணியாத மற்றும் நேர்மையுடன் சேவை புரியும் ஒரு அதிகாரி என்பதாகவும், சட்டவிரோத மற்றும் அழிவுகரமான நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தியவர் என்றும் பலர் கருத்து தெரிவிக்கின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

குறித்த கைது நடவடிக்கையை கண்டித்து ஊடக அறிக்கையொன்றை வெளியிட்ட சுதந்திர ஊடக இயக்கம், குறித்த கைது நடவடிக்கையானது அரச அதிகாரிகளை கருத்து தெரிவிப்பதிலிருந்தும் விமர்சிப்பதிலிருந்தும் அவர்களை விலகி இருக்க வேண்டும் என்பதற்கான முன்னெச்சரிக்கையின் சமிஞ்சையாகும் என்பதுடன் அரசியலமைப்பில் நாட்டு பிரஜைகளுக்கு உறுதியளிக்கப்பட்ட சகல உரிமைகளும் அரச ஊழியர்களுக்கும் காணப்படுவதுடன் அதனை எவ்வித தடையும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரம் அவர்களுக்கும் கொடுக்கப்பட்ட வேண்டும் என்பதை குறித்த ஊடக அறிக்கை சுட்டிகாட்டியமை கவனிக்கத்தக்கதாகும்.(மூலாதாரம்: குறித்த ஊடக அறிக்கை)

“உழைக்கும் மக்கள் சக்தி” அமைப்பு குறித்த கைது நடவடிக்கைக்கு எதிராக கண்டன அறிக்கையொன்றை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

3. தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாஃப் ஜஸீம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு ஓராண்டு நிறைவை முன்னிட்டு இரு வெவ்வேறு இணையவழி கலந்துரையாடல்கள் நடைபெற்றதுடன் அவரை விடுவிக்குமாறு பல சர்வதேச அமைப்புக்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியமை.

தீவிரவாதக் கருத்துக்களை ஊக்குவிக்கும் கவிதை புத்தகத்தை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான அஹ்னாஃப் ஜசீம் கைது செய்யப்பட்டு 2021 மே 16 ஆம் திகதி அன்று ஒருவருடகாலம் பூர்த்தியடைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பாதுகாப்பு அமைச்சர் பிறபித்த உத்தரவின் படி கொழும்பு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அஹ்னாஃப் மீது காவல்துறையினர் இதுவரை நீதிமன்றத்தில் எவ்விதமான குற்றச்சாட்டுகளையும் பதிவு செய்ய தவறிவிட்டனர்.அஹ்னாஃப் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதற்கு எதிரான அடிப்படை உரிமை மனு ஏப்ரல் 10 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது, இந்த மனு எதிர்காலத்தில் விசாரிக்கப்படும்.

கவிஞர் அஹ்னாஃப் விடுதலை குறித்து கலை, கலாச்சாரம் மற்றும் ஊடக சமூகத்தில் ஒரு உற்சாகமான கலந்துரையாடல் தொடங்கப்பட்டுள்ளதுடன் , மே 16 ஆம் திகதி இணையம் ஊடாக மிகவும் வெற்றிகரமான வெவ்வேறு இரு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்த கலந்துரையாடல்களை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் மற்றும் பெயரிடப்படாத சிவில் மற்றும் அரசியல் ஆர்வலர்களின் ஒன்றிணைப்பு ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் .

மனித உரிமைகள், பதிப்பிடும் உரிமை மற்றும் உருவாக்கும் உரிமை ஆகியவற்றை ஆதரிக்கும் 13 சர்வதேச அமைப்புகள் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில், அநீதியிழைக்கும் வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கவிஞர் அஹ்னாப்பை அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்ற மனித உரிமை மீறல்களை ஊக்குவிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் ரத்து செய்யுமாறும் இந்தக் அமைப்புக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தமை கவனிக்கத்தக்கதாகும். (ஆதாரம்: https://bit.ly/34pgutj)

கலை மற்றும் பதிப்பக பாதுகாப்புக்கான செயற்குழுவினால் கவிஞர் அஹ்னாஃப்பை விடுவிக்கக் கோரி ஆன்லைன் மனுவொன்றை தொடங்கியமை. (மூலாதாரம்: Petition - Secretary> Ministry of Defence of Sri Lanka: அஹ்னாப் ஜசீம் கவிஞருக்கு பாதுகாப்பு வழுங்கு! - Change.org)

**அட்டவணை 4: மே 2021: ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய போக்குகள் – நிகழ்வுகள் 01**

| இலக்கம் | நிகழ்வுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய போக்குகள் | 01 |
| | **மொத்தம்** | **03** |

1. உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு மே 3, 1991 இல் யுனெஸ்கோ வெளியிட்ட விண்ட்ஹோக் பிரகடனத்தை “வின்ட்ஹோக் 30+ பிரகடனம் “ என மேம்படுத்தி பெயரிடப்பட்டமை.

மே 3, 1991 இல் யுனெஸ்கோ வெளியிட்ட விண்ட்ஹுக் பிரகடனம், உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். புதிய வெளியீடு விண்ட்ஹோக் 30+ என்று அழைக்கப்படுகிறது. குறித்த பிரகடனத்தின் ஊடாக 1991 விண்ட்ஹோக் பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ள தகவல்களை தற்போதைய சமூக பொருளாதார மற்றும் அரசியல் சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொவிட் -19 தொற்றுநோயால் ஊடக சூழலில் மரபுவழி ஊடக மாதிரிகள் சீர்குலைந்த நிலையில், ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் புதிய சவால்களை இந்த வெளியீடு

எடுத்துக்காட்டுகிறது. "தவறான தகவல் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சுகளை பரப்புதல் மற்றும் ஊக்குவித்தல், சவாலுக்கு உட்படுத்தல்,ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்கான புதிய அச்சுறுத்தல்கள் மற்றும் பத்திரிகை கலையின் போதாமை மற்றும் இலத்திரனியல் மற்றும் இணையவழி பெண் ஊடகவியலாளர்களை துன்புறுத்துதல் போன்றவற்றில் இருந்து பாதுகாத்தல்" ஆகியவற்றின் முக்கியத்துவத்தை குறித்த பிரகடனம் வலியுறுத்துகிறது.

இணையை வழி மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த மாநாட்டில் 150 நாடுகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 3,000 பிரதிநிதிகள் கலந்து கொண்டமை கவனிக்கத்தக்கதாகும்.

யுனெஸ்கோ ஏற்பாடு செய்த ஏப்ரல் 29, 1991 முதல் மே 3, 1991 வரையான காலப்பகுதியில் நமீபியாவின் தலைநகரான வின்ட்ஹோக்கில் தொடர் மாநாட்டின் முடிவில் சுதந்திர , சுயாதீனம் மற்றும் பல ஊடகவியலின் வளர்ச்சிக்கான விண்ட்ஹூீக் பிரகடனம் ஆப்பிரிக்க ஊடகவியலாளர்களினால் 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. விண்ட்ஹோக் பிரகடனம் சுதந்திர ஊடகவியலின் பரந்த செல்வாக்கைக் கொண்ட முதல் சர்வதேச வெளியீடாகக் கருதப்படுகிறது.

**அட்டவணை 5: ஊடக சுதந்திரம்: 2021 ஜனவரி முதல் மே வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூருகள், தலைப்புக்கள் | 2021 ஜனவரி –ஏப்ரல் | 2021 மே மாதம் |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 14 | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 22 | 03 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 | |
| ஊடகங்கள் தொடர்பான புதிய முக்கிய போக்குகள் | | 01 |
| **மொத்தம்** | **37** | **09** |

ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை - 2021-01/04

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25